## Conclusion

The above microlithic sites provide strong evidence to establish the fact that the mesolithic people lived on the river banks. If an intensive exploration is carried out it would be possible to discover more microlithic sites along the river course. The artefacts already collected from the above sites during preliminary exploration definetely indicate that the places located along Vaippar and it's tributaries course may serve as a new avenue for locating the pre-historic settlements.

*Ref.* :

1. The Hindu - March 1985.
2. Indian Express - May 1986.
3. Gazetteer of India - Tamilnadu State, Ramnad Dist. 1972.

# திருவூர்த் திருக்கோயில்

**திரு. குமாரராஜா,** எம்.ஏ.,
உதவியர், தொல்பொருள் ஆய்வுத்துறை

சென்னையில் ஓடும் கூவம் ஆற்றின் தென்கரையில், திருவள்ளூருக்குச் செல்லும் வழியில் சுமார் 40 கி.மீ. தொலைவில் உள்ள ஊர் திருவூர் ஆகும். இவ்வூரில் உள்ள சிவன் கோயில் தற்போது பாழடைந்து இருந்தாலும், கி. பி. 13-ஆம் நூற்றாண்டில், அதாவது பிற்கால பாண்டியர்களின் ஆட்சியில் சிறந்து விளங்கியது. வரலாற்றினை எடுத்தியம்பும் சான்றாக இக்கோயிலில் காணப்படும் கல்வெட்டுகளும் கோயிலின் கட்டிட அமைப்பும் விளங்குகிறது.

இக்கோயிலின் கருவறை கிழக்கு நோக்கி உள்ளது. பழுதடைந்த கோபுர வாயிலை அடுத்து, மகா மண்டபமும், முன் மண்டபமும், உள்ளன. மகா மண்டபத்தில் உள்ள தூண்கள் அழகிய சிற்ப வேலைப்பாடுகளுடன் உள்ளன. இம்மகா மண்டபத்தில் இக்கோயிலைச் சார்ந்த துர்க்கை, பைரவர், தலையில்லாத விஷ்ணு போன்ற உதிரிச் சிற்பங்கள் வைக்கப்பட்டுள்ளன.

முதலாம் ஜடாவர்ம சுந்தர பாண்டியனின் கல்வெட்டு தொடங்கித் தெலுங்குச் சோழ மன்னனான விஜய கண்ட கோபாலன் கல்வெட்டு மற்றும் விஜய நகர அரசர்களின் கல்வெட்டுக்கள் வரையில் 12 கல்வெட்டுகள் இங்குள்ளன. கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் இப்பகுதியை ஆண்ட சோழர்கள் வலிமை குன்றிய போது, மதுரையை ஆண்ட பாண்டியர்கள் சோழ மன்னர்களை வெற்றி கொண்டு அவர்கள் ஆட்சிக்குட்பட்டிருந்த தமிழகத்தின் வடவெல்லையான திருவேங்கடம் வரை வந்துள்ளனர். அதற்கு அடையாளமாகப் பல கோயில்களைக் கட்டியும், சில கோயில்களுக்கு நிலவந்தங்களை அளித்தும் சென்றுள்ளனர். இப்பாண்டியர்களில் முதலில் திருவேங்கடம் வரை தன் படைபலத்தைப் பெருக்கியவன் முதலாம் ஜடாவர்ம சுந்தர பாண்டியன் (கி.பி. 1251 - 1284) ஆவான். இவனது 11-ஆம்

ஆட்சியாண்டில் அதாவது கி.பி. 1261[1]-ல் திருவூர்க் கோயில் கற் கோயிலாகக் கட்டப்பட்டது. இதனை ஒழுகரை எனப்படும் குலோத்துங்க நல்லூரைச் சேர்ந்த திருவண்ணாமலை உடையான் என்பவன் கட்டியுள்ளான். வெண்பையூர் என்றும் துகடூர் என்றும் வழங்கப்படும் இடத்தின் தலைவன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளான். இதே மன்னனின் இதே ஆட்சியாண்டைச் சேர்ந்த மற்றொரு கல்வெட்டில் இவன் மலையன் திருவண்ணாமலை உடையான் என்றும் வழங்கப்பட்டுள்ளான்.[2] இதே மன்னனின் 18-வது ஆட்சி யாண்டில் (கி.பி. 1268) ஒழுகரையைச் சேர்ந்த குலத்தறையன் ஆகிய பெரியாண்டவன் என்ற வணிகன் இக்கோயிலுக்கு நிலத் தினைத் தேவதானமாக அளித்துள்ளான்.[3]

பாண்டியர்களுக்கு பின்னர் தெலுங்குச் சோழ மன்னனான விஜய கண்ட கோபாலனின் 18-ஆம் ஆட்சியாண்டில்[4] இக் கோயில் கணக்குகள் பிச்சாண்டவனான வில்லவரையன் என்பவனால் சீர் செய்யப்பட்டன. அப்பொழுது அயத்தூர் என்ற பழைய தேவதான கிராமம் இம்மன்னனின் 17-ஆம் ஆட்சியாண்டு வரை கோயில் கணக்கில் இல்லாதது கண்டுபிடிக்கப்பட்டது. இதனை நேர் செய்ததுடன், அதிலிருந்து கிடைத்த வருவாய் இக்கோயிலில் சித்திரை மாதத்தில் விழா நடத்தவும் பயன்படுத்தப்பட்டது. இதே இக்கல்வெட்டின் மூலம் இக்கோயில் இறைவன் பெயர் ரிஷ்ய சிங்கீஸ்வரர் எனவும், திருகூர் என்ற திருவூர், பெருமுளையூர் என்ற ஊரின் ஒரு பகுதியாக இருந்துள்ளது என்றும் தெரிகிறது. (இப் பெருமுளையூர் தற்போது பெருமாள்பட்டு என வழங்கப்படுகிறது) இக்கல்வெட்டின் மூலம் உலகளந்த சோழ சதுர்வேதி மங்கலமான பெருமுளையூர் ஈக்காடு கோட்டத்தில் இருந்துள்ளது தெரிகிறது.

கோயிலின் நுழைவாயிலில் உள்ள விஜயநகர அரசர் சளுவ வம்சத்தினைச் சார்ந்த திம்மைய தேவரின் காலத்திய கல்வெட்டில் இவனுக்கு முன்னர் ஆட்சி புரிந்த திப்பைய தேவரின் நினைவாக கி. பி. 1502-ஆம் ஆண்டு, இவ்வூர் மகாஜனங்களும், கேசவராயன் என்பவனும் நியாய கட்டணமாக தான் அளிக்க வேண்டிய தொகைக்கு தென்னந் தோப்பினை வாங்கிக் கோயிலுக்குத் தான மாக அளித்துள்ளனர்.[5]

கி. பி. 1519-இல் கிருஷ்ண தேவராயரிள் பிரதானியான இம்மடி திருமலை நாயக்கரும் திருகூர் மகாஜனங்களும் சேர்ந்து திருவூரின் அருகிலுள்ள வரதராஜபட்டு, மகாமண்டல புருஷன் பட்டு ஆகிய கிராமங்களிலிருந்து வசூலிக்கப்பட்ட நீர்க்கூலி எனப் பட்ட தண்ணீருக்கான வரியாகிய 6 பொன்னை இக்கோயிலுக்கு வழங்கியுள்ளனர்.[6]

கிருஷ்ண தேவராயர் காலத்தில் தமிழ் நிகண்டினை தொகுத் தவர் பெயர் மகாமண்டலப் புருஷர். இவரது பெயராலேயே மகாமண்டபப் புருஷன்பட்டு என்று கிராமத்திற்கு பெயரிடப் பட்டுள்ளது. கிருஷ்ண தேவராயரின் கி. பி. 1527-ஆம் ஆண்டில் இம்முடி திருமலை நாயக்கரின் பிரதானியான சதாசிவ நாயக்கர், என்பவர் திருமலை எனப்பட்ட திருவூர் சிங்கீஸ்வாம் உடைய நாயனார் கோயிலுக்கு மடவிளாகமாக வீடுகட்ட நிலத்தினை இவ்வூர் மக்களிடமிருந்து வாங்கி வழங்கியுள்ளான்.[7]

விஜய நகர ஆரவீடு வம்சத்தின் வழி வந்த வெங்கடாத்திரி மன்னர் இக்கோயிலில் உள்ள கரிய மாணிக்க பெருமாளுக்கு திருவூர் மற்றும் பெருமுளைப்பட்டு ஆகிய இடங்களிலிருந்து பெறப்பட்ட வருவாயை நிவந்தமாக வழங்கியுள்ளார்.[8] இதில் சிவராம நரசப்ப நாயக்கர் என்பவர் அரசரின் பிரதானியாகக் குறிப்பிடப்பட்டுள்ளார்.

கி.பி. 14-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டில் கருவறை முகப்பான, முகமனையினை இவ்வூரைச் சேர்ந்த அணுக்கி புருஷோத்தமன் பட்டர் வரதன் என்பவர் செய்து வழங்கியுள்ளார்.[9] அட்டகப் பிள்ளையார் என்ற பிள்ளையார் கோயிலில் இரவில் விளக்கெரிக்கவும், பூஜைக்காகவும் சிங்கீஸ்வரம் உடையார் கோயிலிலிருந்து தனக்குச் சேர வேணடிய பணம் மற்றும் நெல்லினைத் தானமாக வழங்கியுள்ளான்.[10]

இக்கல்வெட்டில் குறிப்பிடப்பட்ட அட்டகப் பிள்ளையார் தற் போது கூவம் ஆற்றில் மேற்குக் கரையில் உள்ள சிறிய பிள்ளையார் கோயிலாக இருத்தல் வேணடும். மற்றொரு கோயிலான எல்லை யம்மன் தற்போது ஓசூர் அம்மன் என வழங்கப்படுகிறது. இக்

கோயில் இவ்வூரின் தென்மேற்கு கரையில் உள்ளது. இங்கு காணப் படும் கல்வெட்டில்[11] திருகூரைச் சேர்ந்த மகாஜனங்கள், எல்லை யம்மன் கோயிலுக்கு ஸ்ரீநகர தோட்டமாகத் தோட்டத்தினைத் தானமாக அளித்துள்ளனர்

கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்த பாண்டியரின் கலைப் பணிக்குல, கட்டிடக் கலைகிகும் சிறந்த எடுத்துக்காட்டாகவும், பிற் காலத்திய விஜய நகர அரசர்களால் நன்கு போற்றிப் பாதுகாக்கப் பட்ட திருவூர்த் திருக்கோயில் தற்போது கேட்பாரற்று, கால்நடை களின் இருப்பிடமாகத் திகழ்கின்றது.

---

1. *A.R.E.*, 1939 - 40. No. 333.
2. Ibid. No. 336.
3. Ibid. No. 334.
4. Ibid. No. 335.
5. Ibid. No. 339.
6. Ibid. No. 340.
7. Ibid. No. 332.
8. Ibid. No. 338.
9. Ibid. No. 337.
10. Ibid. No. 341.
11. *A.R E.*, 1947 - 48. No. 87.

# தேவனூர் கல்வெட்டுத்தூண்

முத்து. எத்திராசன்

தென்னார்க்காடு இராமசாமி படையாட்சி மாவட்டத்திலுள்ள செஞ்சிக்கு வடக்கே 15 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. தேவனூர் என்னும் சிற்றூர். அவ்வூரை ஒட்டிய வயல்வெளியில் கேட்பாரற்றுக் கிடக்கிறது சிவன் கோயில் ஒன்று.

அக்கோயிலின் சுற்றுப்புறத்தில் உள்ள நிலத்தை அங்குள்ளவர்கள் தொடக்கக் காலத்தில் உழுது பயிர் செய்தபோது சிறுசிறு குடுவைகள் கிடைத்துள்ளன. அக்குடுவையில் மிளகாய் விதை அளவு நாணயங்கள் கிடைத்ததாக அவ்வூரில் உள்ளவர் கூறினர். இதையறியும்போது அப்பகுதி ஊராக இருந்து போர் ஒன்றில் அழிந்து போயிருக்கவேண்டும். போர்க்காலங்களில் மக்களால் புதைக்கப்பட்ட அக்குடுவைகளே இப்போது அங்குள்ளவர்களுக்குப் புதையலாக இருந்துள்ளது.

அச்சிவன் கோயில் சுற்றி செங்கற்களால் ஆன மதில்சுவர். அம்மதில் இப்போது சிதைந்து காணப்படுகிறது. அம்மதிலைத் தாண்டி உள்ளே சென்றால் கோயிலின் கருப்பகிரகம் இடிந்து சிவலிங்கம் மட்டும் காணப்டுகிறது.

கருப்பகிரகத்தை அடுத்துள்ள அர்த்த மண்டபம் இடியாமல் இருக்கிறது. அதையடுத்துள்ள மகாமண்டபம் பிற்காலத்தனவாக இருக்கவேண்டும்.

பிற்காலச் சோழர் காலத்திய கல்வெட்டுகள் கருவறை சுற்றியுள்ள குமுதப்பகுதியில் இருப்பதால் அக்கோயில் பிற்காலச் சோழர் காலத்தில் கட்டப்பட்டனவாகும் என்பது தெளிவாகிறது.

மகாமண்டபத்தில் கட்டப்பட்ட தூண்களில் தென்புறத்தில் அமைந்துள்ள தூண் ஒன்றில் கல்வெட்டொன்று காணப்படுகிறது.

கல்வெட்டில் காணப்பட்டபடு அவ்வெழுத்தை எழுதியுள்ளேன். அதுதான் இது.

"கணணுடையா
மனஅழயாவிாத
நகொணடாான
டடதூண"

இக்கல்வெட்டில் மெய்யெழுத்துக்கள் புள்ளியில்லாமல் காணப்படு கின்றன. அக்கல்வெட்டின் வாசகம் "கண்ணுடையாமன அழியா விரதங் கொண்டான் நட்டதூண்" என்பதாகும்.

அதன் கீழ் ஐந்து இதழ்களை உடைய பூவொன்று வரையப் பட்டு அதைச்சுற்றி வட்டமொன்று போடப்பட்டுள்ளது.

மேற்காணும் கல்வெட்டின்படி அங்குள்ள தூண்களில் ஒன்றான இத்தூண் பழதடைந்த தூணிற்குப் பதிலாக வைக்கப்பட்ட தென்பதும், அத்தூணை நட்டவன் கண்ணுடையான் மனம் அழியா விரதங்கொண்டான் என்ற நீண்ட பெயர் கொண்டவன் என்பதும் இதன்மூலம் நாம் அறிந்து கொள்கிறோம்.

கண்ணுடையான் என்ற பெயர் கொண்டு இத்தூணை நட்டவன் சிவ சமயத்தைச் சார்ந்தவன் என நாம் அறிகிறோம்.

எழுத்தமைதியை நோக்க இக்கல்வெட்டின் காலம் கி.பி. 14-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததென கல்வெட்டாய்வாளர்கள் கூறு கின்றனர். கட்டடம் அமைப்பும் சிற்ப ஒழுங்கும் அதே காலத்தைச சார்ந்தவை என்பது தெளிவாகிறது.

# முகாசப்பரூர்

## கிருஷ்ணமூர்த்தி

தென் ஆர்க்காடு மாவட்டம் விருத்தாசலம் வட்டத்தில் முகாசப்பரூர் என்ற ஊர் உள்ளது. விருத்தாசத்திலிருந்து உளுந்தூர்பேட்டை செல்லும் சாலையில் மங்களம் பேட்டைக்கருகில் மேற்படி ஊர் உள்ளது. பழங்காலத்தில் விருத்தாசலம் பருவூர் கூற்றத்தில் ஓர் ஊராக இருந்துள்ளது. அந்தப் பருவூரே இன்று முகாசப்பரூர் என வழங்கப்படுகிறது. முகாசா என்றால் வரியில்லாத மானிய கிராமம் என்று பொருள்படும்.

விருத்தாசலம் வட்டத்தில் பருவூர் என்ற பெயரில் இரு ஊர்கள் உள்ளன. ஒன்று காட்டுப் பருவூர் என்றும் மற்றொன்று முகாசப் பரூர் அல்லது பருவூர் என்றும் ஆங்கிலேயர் ஆட்சியின் போது வழங்கப்பட்டமை தென் ஆர்க்காடு மாவட்ட விவர நூல் மூலம் அறிகிறோம். முக்காசப்பரூர் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தது. இங்கு திருவாளர்கள் கயே (Kaye) மற்றும் கன்லிப்பி (Cunliffe) இருவரும் தொல்லுயிர்ப் படிவம் சுண்ணாம்புக்கல் (Fossils, Lime Stone) ஆகியவை கண்டறிந்ததாக மாவட்ட விவர நூல் குறிப்பிடு கிறது.

வரலாற்றுக் காலம் என்று பார்க்கும் போது இங்குள்ள மகாவீரர் சிலை சோழர் காலத்தவை எனலாம். விஜய நகர் அரசர் காலத்தவையாகச் சில உதிரிச் சிற்பங்கள் காண்கிறோம்.

பல கல்வெட்டுகளில் இடம் பெறும், கச்சிராயர் யார் என்பதற்கு முகாசப்பரூர் ஜமீன் தார் துணைபுரிகின்றனர். பிரிட்டிஷார் ஆண்டபோது இங்குள்ள ஜமீன்தார், கச்சிராவ் என அழைக்கப்பட்டுள்ளனர். "வீரசேகர முத்துக் கிருஷ்ணகச்சிராவ்" அவர்களுள் ஒருவராவார். இவர்கள் உடையார் பாளையம் ஜமீன் தாருடன் மணவினை கண்டுள்ளனர். இவர்கள் இராஜ வன்னியர் என்ற மரபினர் எனலாம்.

பெஸ்கி எனப்படும் வீரமாமுனிவர் இவ்வூருக்கருகில் கோணாங் குப்பத்தில் மாதா கோவில் உருவாக்கி, மதப் பிரச்சாரம் செய்ய முயன்ற போது, அப்போது பருவூர் ஜமீன்தாராக இருந்தவர் நிலத் தானம் செய்ததுடன் சில இந்துக்களையும் வீரமாமுனிவருக்குத் துணையாக அனுப்பியுள்ளார். மாவட்ட விவர நூல் எழுதப்பட்ட காலத்தில் கோணாங்குப்பத்தில் கிறித்தவர் மிகவும் குறைவு. ஆயின் இன்று மிகுதியாக உள்ளனர். கச்சிராயர் மரபில் வந்த தற்போதுள்ள முத்துக் கிருஷ்ண கச்சிராவ் தம் வீட்டில் இருந்த ஜமுதாடு, வாள், தம் முன்னோர் அணிந்த பிரிட்டிஷார் வழங்கிய ஆடை ஆகியவற்றை என்னிடம் காட்டினார். இனி இங்குள்ள சிற்பங்களையும், கோயில்கனையும் காண்போம்.

## மகாவீரர் சிலை

மூகாசப்பரூர் வேல்சாமி கச்சிராவ் அவர்களுடைய நிலத்தில் மகாவீரர் சிலை ஒன்று காணப்படுகிறது. சிலையின் நீளம் 120 செ.மீ. அகலம் 95 செ.மீ. செவ்வகமான கல்லில் மகாவீரர் அமர்ந்த நிலையில், தியான நிலையில் காணப்படுகிறார். நீண்ட தொளை உடைய செவி. முகமும் மூக்கும் சிறிது தேய்ந்துள்ளது மகாவீரருக்கு இருபுறமும் ஏவல் மகளிர். இடது கை சாமரம் ஏந்தியநிலை. வலது கை-தொடை மீது காட்டப்படுகிறது. பத்ரகுண்டலம், கரண்ட மகுடம். இப்பெண்களுக்கு மேலே இரு புறமும் கந்தருவர்கள் காட்டப்பட்டுள்ளனர். இச்சிற்பம் கி.பி.10-11 ஆம்நூற்றாண்டு எனலாம். எனவே சோழர் காலத்தில் இங்குச் சமணர் இருந்திருக்க வேண்டும். முகாசப்பரூரில் மகாவீரர் சிற்பமே மிகவும் தொன்மையானது ஆகும். எனவே சோழர் காலத்தில் இங்கு சமணக் கோயில் இருந்திருக்க வேண்டும். இங்குள்ள சமணர் திருமேனி இதுவரை வரலாற்றறிஞர்களால் குறிப்பிடப்படவில்லை.

## நடுகல்

முகாசப்பரூர் வீரசேகர முத்துகிருஷ்ண கச்சிராவ் அவர் களுடைய நிலத்தின் மேற்குப் பகுதி வரப் போரம் நிறுத்தி வைக்கப்பட்ட கல், நடுகல் சிற்பமாகும். வீரன் ஒரு கையில் வில்லை ஏந்தியிருக்க, வலக்கையில் வில் நாணில் அம்பை வைத்து

நிற்கும் சிற்பம். இது 75 செ. மீ. நீளம், 45 செ. மீ. அகலம்-போரிடும் தோற்றத்தில் திரிபங்க நிலையில் சிலை உள்ளது. இடையில் ஆடை காட்டப்பட்டுள்ளது. வில்லுக்குக் கீழே கட்டாரி ஒன்று செதுக்கப்பட்டுள்ளது. பொதுவாக நடுகல் சிற்பங்கள் வில், அம்பு, வில், கேடயம் தனித்தனியாகக் காட்டப்படுமே யொழிய வில்லில் அம்பை வைத்து காட்டப்படுவது மிக பிற்பட்ட காலமெனலாம். இதன் காலம் கி. பி. 17-ஆம் நூற்றாண்டு எனலாம்.

## கோயில்கள்

முகாசப்பரூரில் சிவன் கோயில், அம்மன் கோயில், பெருமாள் கோயில் தனித்தனியாக இருப்பினும் யாவும் சம காலத்தவை யாகவே உள்ளன. சிவன் கோயில் மூன்று நிலைகளை உடையது. இதில் சுற்று மண்டபமும் எடுக்கப்பட்டுள்ளது. இக்கோயிலில் கல்வெட்டொன்று உள்ளது. பைரவர் உதிரிச் சிற்பமும், இரு கைகளிலும் தாமரை ஏந்திய சூரியன் சிற்பமும், கஜலட்சுமி சிற்பமும் மிகச் சிறந்த சிற்பங்கள் எனலாம். கருவறை மேற்குச் சுவரில் உள்ள கோஷ்டத்தில் அழகான லிங்கோத்பர் உள்ளார். கோயில் விமானம் செங்கற்களாலும் அடிப்பகுதி கருங்கற்களி னாலும் கட்டப்பட்டுள்ளன. கோயிலைச் சுற்றி வந்தால் அமர்ந்த நிலையில் கூடிய விஷ்ணு. அஞ்சலியுடன் கூடிய கருடன், மிகப் பெரிய வடிவில் கூடிய விஷ்ணு, பழைய நந்தி, பழைய லிங்கம், வினாயகரைக் காணலாம். அமர்ந்த நிலையில் கூடிய இலட்சுமி நரசிம்மர், வள்ளி தெய்வாணையுடன் கூடிய முருகன் சிற்பமும் காணலாம். சண்டிகேஸ்வரருக்குத் தனிக்கோயில் உள்ளது.

## அம்மன் கோயில்

அம்மன் கோயில் சிறிய வடிவில் கூடியது. அதிஷ்டானமும், விமானமும் கருங்கல்லில் கூடியதாக உள்ளது, காமச் சிற்பங்கள் அழகாகவும் நேர்த்தியாகவும் மண்டபத்தில் உள்ளன. இக்கோயி லில் ஒரு கல்வெட்டு உள்ளது-

## விஷ்ணு கோயில்

இக்கோயிலும் சிறிய வடிவில் உள்ளது. ஸ்ரீதேவி, பூதேவி யுடன் நின்ற நிலையில் பெருமாள் காட்சி தருகிறார். காலம் கி.பி. *16-17* - ஆம் நூற்றாண்டு எனலாம். இக்கோயிலில் ஒரு கல்வெட்டுள்ளது.

## புடைப்புச் சிற்பங்கள்

சிவன் கோயில் மண்டபத்தில் மேற்குப் புறத்தில் உள்ள இரண்டாவது தூணில் முத்துக் கிருஷ்ணப்பர் உருவம் பொறிக்கப் பட்டுள்ளது. நல்ல மீசை, தலைக்கு மேல் கொண்டை, காதுகளில் குண்டலங்கள், கழுத்தில் மூன்று மாலைகள், கைகளில் காப்பு, தோள் வளை கால் வரை ஆடை காட்டப்பட்டுள்ளன. இடுப்பில் (இடப்புறம்) கத்தி செருகப்பட்டுள்ளது நன்கு தெரிகிறது. அரசர்க் குரிய கம்பீர தோற்றத்துடன் இப்புடைப்புச் சிற்பம் உள்ளது. இதையடுத்து கல்வெட்டும், கல்வெட்டுக்கு மேலே ஸ்ரீதேவி, பூதேவி யுடன் கூடிய திருமால் நின்ற கோலத்தில் காட்சி தருகிறார். சங்கு சக்கரம், அபையம், ஊரு அஸ்தம் என்ற நிலையில் காட்டப்பட்டு உள்ளார். கிரீட மகுடம். தேவியர் இருவரும் ஒரு கையில் மலரும் மற்றொரு கை லோலஹஸ்தத்திலும் காட்டப்பட்டுள்ளனர்.

## கல்வெட்டு-1

ஸ்வஸ்திரி சாலி வாகன சகாப்தம்
*1672* செல்ல நின்
ற பிரம்மோதூ த வருஷம் அற்ப்பசி மாதம் 27
பருவூர்ராச ஸ்ரீ பொன்னம்பலக்கச்
சிராயர் குமாரர் முத்துக்கிஷ்ண
ப்பகச்சிராயர் தர்மம். — பிரிட்டிஷார் ஆட்சியின் போது

கி. பி. *1750* - இல் பருவூர் ராசாவாகிய பொன்னம்பலக்கச்சிராயர் மகன் முத்து கிருஷ்ணப்பகச்சிராயர் கோயிலுக்குச் செய்த (கட்டிடம் எழுப்பிய தானம்) தருமத்தை இக்கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. இக்கச்சிராயரை தென் ஆர்க்காடு மாவட்ட விவர நூலும் குறிப்பிட்டுள்ளது.

**கல்வெட்டு - 2**

ஸ்வஸ்திரி வருஷம் சாலிவாகன சகாப்தம்

*1672* மேல் செல்லா நின்ற

பிரமோதூத வருஷ அற்பசி மாதம் 27ம் தேதி

பருவூர் ராச ஸ்ரீ முத்து கிருஷ்ண

ப்ப கச்சிராயர் தாயார் பெரியம்

மை அம்மாளவர்கள் தருமம்.

மேற்படி கல்வெட்டின் மூலம் மகன் தருமம் செய்தது போலே தாயும் தருமம் செய்த விபரம் அறிகிறோம். பொன்னம்பலப் பிள்ளை உயிருடன் இல்லாதால் மகனுடன் சேர்த்துத் தாயார் அழைக்கப்பட்டுள்ளார். விஷ்ணு கோயில் திருப்பணியில் பெரியம்மை அம்மையாரும் ஈடுபட்டார் போலும். இக்கல் வெட்டிற்குக் கீழே பெரியம்மை அம்மாள் அவருடைய உருவம் வணங்கும் நிலையில் உள்ளது. கால் வரை ஆடை, மார்பில் கச்சில்லை. காதுகளில் ஓலைக்குழை, வலப்புறமாக கொண்டை காட்டப்பட்டுள்ளது. மேற்கண்ட கல்வெட்டு பெருமாள் கோவில் முன் மண்டபத்தின் மேற்கில் உள்ள தூணில் உள்ளது. கல்வெட்டுக்குக் கீழே தானம் தந்தவர் உருவமும் மேலே விஷ்ணு சிற்பமும் காட்டப்பட்டுள்ளது. பெருமாள் கோவில் திருப்பணி கி. பி. 1750-இல் நடந்தது எனலாம்.

**கல்வெட்டு - 3**

அம்மன் கோவில் வெளிப்புற மண்டபத்தில் உள்ள கதவு நிலையின் மேல் இரண்டு வரி கல்வெட்டு உள்ளன.

1) ஸ்வஸ்திஸ்ரீ சாலி வாகன சகாப்தம் 1734 கலியுக சகாப்தம் 4917-க்கு மேல் செல்ல நின்ற

2) அஸ்கிரஸ நாம ஸம் வஸரன அற்பிசிம அன்ன பூரணி அம்மாள் செய்துள்ளார் என்று கல்வெட்டின் மூலம் அறிகிறோம். கலியுக வருஷம் 4913 என்றிருக்க வேண்டும்.

## முடிவுரை

பிற்காலச் சோழர் காலத்தில் பருவூர் பெற்ற கூற்றமாகவும், ஊராகவும் இருந்துள்ளது. இவ்வூரை சேர்ந்த கச்சிராயர் மரபினர் கோயில் திருப்பணிகளாலும் போரினாலும் புகழ் பெற்று விளங்கினர் என்பது கல்வெட்டுகளால் தெரிய வருகிறது. ஆங்கிலேயர் நம் நாட்டை ஆள முற்பட்ட போது, அவர்களுடன் உடன்பட்டுச் சென்றதால் கச்சிராயர் முதலில் உதவிப்பணம் பெற்றனர். எனினும் முத்துக் கிருஷ்ணப்ப கச்சிராவுக்குப் பின் உதவிப்பணம் பெறவில்லை. இவர்கள் மக்களால் ஜமீன்தாரர் என்ற வகையில் மதிக்கப்பட்டு வந்துள்ளனர். இன்னும் இம்மரபினர் மதிக்கப்பட்டு வருகின்றனர்.

---

ஆய்வின்போது ஆசிரியர் இராஜேந்திரன், மற்றும் கச்சிராவ் மரபில் வந்த முத்துகிருஷ்ண கச்சிராவ் உடனிருந்தனர். அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

# குழாய்களும், வடிகால்களும்

**சீ. வசந்தி**

**அகழாய்வாளர், தொல்பொருள் ஆய்வுத்துறை**

மனிதனின் அன்றாடத் தேவைகளில் தண்ணீர் முக்கியமானது. குடிநீருக்காகவும், கழிவு நீருக்காகவும் சுடுமண், கல் மற்றும் செங்கற்களால் ஆன குழாய்கள் மற்றும், வடிகால்களை, நிலத்தின் மேற்பரப்பிலும், நிலத்தடியிலும் பண்டைக்கால மக்கள் பயன்படுத்தியுள்ளனர். கழிவு நீரை அகற்றத் தெரிந்த நாகரிகமே உலக நாகரிகங்களில் தலைசிறந்தது ஆகும்.

சிந்து சமவெளி நாகரிகத்தின் சிறப்பியல்பே கழிவு நீரை வெளியேற்றத் தெரிந்த அவர்களது அறிவாகும். சிந்துவெளி நகரமான மொகஞ்சதாரோவில் பல அடுக்கு மாடி வீடுகளிலிருந்து நீர் வழிந்தோடிச் செல்ல குழாய்கள் அமைக்கப் பெற்றிருந்தன. சிறிய வீடுகளிலும் குளியலறைகள் தனித்தனியே இருந்துள்ளன. இக்குளியலறையிலிருந்து செல்லும் கழிவு நீர் தரையடிச் சாக்கடையில் கலந்து நகருக்கு வெளியில் உள்ள பெரிய கழிவு நீர்க் குழியில் விழும்படி வகை செய்யப்பட்டுள்ளது.[1]

தமிழகத்தின் பண்டையச் சமுதாயம் பற்றி அறிய உதவும் சங்க இலக்கியங்களில், நன்னீர் குழாய்கள் பற்றியும், கழிவு நீர் குழாய்கள் பற்றியும் குறிப்புகள் காணப்படுகின்றன.
பரிபாடலில்,

> 'அருவி சொரிந்த திரையற்றுரந்து
> நெடுமால் சுருங்கை நடுவழிப் போந்து
> கடுமா களிறணத்துக் கைவிடு நீர் போலும்'

*[பரிபாடல்:104-107]*

அதாவது அகழிகளில் நீர் விழுமாறு அமைக்கப்பட்டிருந்த குழாய்கள் நீண்டு யானையின் துதிக்கைப் போல இருந்துள்ளன. எனவே, நீண்ட சுரங்கம் போன்று நீர் பூமிக்கடியில் செல்லுமாறு குழாய் அமைக்கப்பட்டிருந்ததாக அறிய முடிகின்றது. இவை தற்காலத்திய பாதாள கழிவு நீர் குழாயைப் போன்று இருந்திருக்கக் கூடும். மேலும், நீர் செல்லும் இச்சுருங்கைகள் செங்கற்களால் மட்டுமின்றி கருங்கற்களாலும் ஆனதாக மதுரைக் காஞ்சியில் குறிப்பிடப்பட்டுள்ளது.[2]

சிலப்பதிகாரம்,[3] மணிமேகலை[4] மற்றும் சீவக சிந்தாமணியிலும்[5] சுருங்கை, தூம்பு, ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ளன.

இலக்கியங்கள் காட்டும் இச்செய்திகளை உண்மையெனப் புலப்படுத்துபவை அகழாய்வுச் சான்றுகளே. தமிழகத்தில். அரிக்கமேடு, உறையூர், வசவசமுத்திரம், கரூர் திருக்கோவிலூர், படைவீடு, கங்கை கொண்ட சோழபுரம், கண்ணனூர் ஆகிய இடங்களில் நடைபெற்ற அகழாய்வுகளிலும், நங்கநல்லூர், உலகடம் ஆகிய இடங்களில் பூமியைத் தோண்டும் போதும், சுடுமண் செங்கல் மற்றும் கருங்கல் ஆகியவற்றால் ஆன குழாய்கள் கிடைத்துள்ளன.

அரிக்கமேட்டில்,[6] துணிகளுக்குச் சாயம் தோய்க்கும் தொழிலகத்தை ஒட்டி, கழிவு நீர் செல்ல சிறுசிறு கழிவுநீர் குழாய்கள் அமைக்கப் பட்டிருந்தன. இவை, 38 செ.மீ. அகலமும், 45 செ.மீ. உயரமும் உடைய பெரிய கழிவு நீர் குழாய்களில் சென்று சேரும் வண்ணம் நிலத்தின் மட்டத்திற்கு ஏற்ப சாய்வாக அமைக்கப்பட்டுள்ளன. கி.மு. முதல் நூற்றாண்டு முதல் கி.பி. முதல் நூற்றாண்டு வரையிலான காலகட்டத்தினைச் சேர்ந்த கழிவு நீர்க்குழாய்களில் மிக நீளமானது 4.5 மீட்டர் பக்க அளவுள்ள குழாயே ஆகும்.

வசவ சமுத்திரத்தில் நடத்தப் பெற்ற அகழாய்விலும், சாயத் தொட்டிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை முற்றிலும் சிதைந்த நிலையிலேயேக் கிடைத்துள்ளன. இவற்றிலிருந்து நீரைக் கொண்டு செல்ல சுடுமண் குழாய்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் இரண்டு குழாய்களேச் சேகரிக்கப்பட்டன.[7] ஒரு குழாயின் 28 செ.மீ. நீளமும், அகன்ற வாய்ப்பகுதி 14 செ.மீ. விட்டமும் குறுகிய வாய்பகுதி 8 செ.மீ. விட்டமும் உள்ளது. இக்குறுகிய வாய்ப் பகுதியின் உதடுகள் சிறிது தடித்துள்ளதால், இவை ஒன்றோடொன்று பொருந்துவதற்கு ஏதுவாக வடிவமைக்கப்பட்டுள்ளன. இவை கி.பி. முதல் அல்லது இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்கக்கூடும்.

வசவ சமுத்திரம் போன்று உறையூரிலும்,[8] கி.மு. மூன்றாம் நூற்றாண்டு முதல் கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக்கால நிலைக்கு உட்பட்ட பாள நிலையில் 7.10 மீட்டர் ஆழத்தில் ஒரு சாயத் தொட்டி அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இச்சாயத்தொட்டிக்கு

அரிக்கமேட்டில் அமைந்திருந்தது போன்றே நீர் செல்ல குழாய்கள் அமைந்திருந்தன.

கரூரில் நடைபெற்ற அகழாய்வில் கண்டுபிடிக்கப்பட்ட கட்டிடப் பகுதிக்கு மேல் 2.45 மீட்டர் நீளத்தில் வடிகால் குழாய் கண்டுபிடிக்கப்பட்டது. இக்குழாயின் இருபக்கங்களிலும் களிமண் ணைக் குழைத்துப் பூசி ஒட்டப்பட்ட செங்கற்களை செங்குத்தாக நிறுத்தி உட்புறத்தில் கருப்பு வெள்ளை மற்றும் சிவப்புநிற குவார்ட்ஸ் கற்கள் சுண்ணாம்பில் கலந்து பூசப்பட்டுள்ளது. இது 40 செ.மீ. பருமன் அளவில் 40 செ.மீ. அகலத்தில் உள்ளது. இப்பகுதியில் திட்டமிடப்பட்ட கட்டிட அமைப்பினைக் காண முடிகிறது.[9]

திருக்கோவிலூரில்[19] தற்போது நடத்தப்பெற்ற அகழாய்வில் TRK-5 அகழாய்வுக் குழியில் மூன்றாவது பாள நிலையில் 1.70 மீட்டர் ஆழத்தில் கழிவு நீர் குழாய்கள் வெளிப்படுத்தப்பட்டன. சுமார் 9·50 மீட்டர் நீளம் வரையில், 50 குழாய்கள் வெளிப்படுத்தப் பட்டன. இக்குழாய்களில் ஒன்று 19 செ.மீ. வெளிப்புற அளவு நீளமும், 16 செ.மீ. உட்புற நீளமும், வெளிப்புற விட்டம் $16\frac{1}{2}$ செ மீட்டரும், உட்புற விட்டம் $14\frac{1}{2}$ செ. மீட்டரும் கொண்டவையாகும் இவற்றின் உட்புற உதடுகளின் அளவு 2 செ.மீ. ஆகும். இக்குழாய் கள் வடக்கிலிருந்து தென்மேற்காகச் செல்கின்றன. TRK-6 என்ற அகழாய்வுக்குழியில் கண்டுபிடிக்கப்பட்ட கருங்கல் மதிற் சுவருக்கு அருகில் 1·80 மீட்டர் ஆழத்திலும் இவை வெளிப்படுத்தப்பட்டன. TRK-5 அகழாய்வுக்குழியில் II - III என்ற ஆய்வுகளுக்கு மேல் இவை செல்லவில்லை. எனவே, தற்போது கோட்டை மேடு என வழங்கப்படும் இப்பகுதியிலிருந்து ஆற்றிற்கோ அல்லது கோட்டை யைச் சுற்றியிருக்கும் அகழிக்கோ கழிவு நீர் இக்குழாய்கள் வழியாகக் கொண்டு செல்லப்பட்டிருக்கலாம். இவை கி.பி. 1 முதல் 4-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாக இருக்கக்கூடும்.

கங்கை கொண்ட சோழபுரத்தில்[11] கல்குளம் என்று வழங்கப் படும் குளத்திற்கு, நீர் வருவதற்காகப் பூமிக்கடியில் கட்டப்பட்ட சோழர் காலக் கால்வாய் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. வடக்கு தெற்காக 2 மீட்டர் அகலம் கொண்ட கருங்கற்களால் ஆன கால்வாய் ஆகும் இது. பதினொரு கருங்கற்கள் கால்வாய் மேற்

பகுதியில் மூட வரிசையாக அமைக்கப்பட்டிருக்கின்றன. இக்கருங் கற்கள் 1.5 × 3 5 செ.மீ, 71X30X25 செ.மீ. அளவுகளில் காணப் படுகின்றன. பக்கவாட்டினை வலிமைப்படுத்தவும், நீர்க்கசிவு இல்லாதிருக்கவும் இருபுறங்களிலும் செம்பூராங் கற்களையும் களிமண்ணையும் சேர்த்துக் குழைத்துப் பூசி பலப்படுத்தப் பட்டுள்ளது. கால்வாயின் கீழ்ப்பகுதியில் இருபுறங்களிலும் கருங் கற்கள் தாங்கி நிற்கின்றன. கால்வாயின் ஆழம் 41 செ.மீ. அகலம் 54 செ.மீ. மொத்த ஆழம் 3.20 மீட்டராகும். இக்கால்வாயின் மூலம் சோழர்கள் காலத்திய கால்வாய் அமைப்பினை நன்கு அறிய முடிகின்றது.

கண்ணனூரில்[12] (திருச்சி மாவட்டத்தில் சமயபுரத்திற்கு அருகில் உள்ளது.) நடைபெற்ற அகழாய்வில் 6.20 மீட்டர் ஆழத்தில் கி. பி. 11 முதல் 14-ஆம் நூற்றாண்டு வரையிலான காலகட்டத் தினைச் சேர்ந்த கற்கள் பாவப்பட்ட கால்வாய் கண்டு பிடிக்கப் பட்டது.

தற்போது படைவீட்டில்[13] நடத்தப்பட்ட அகழாய்வில் செங் கற்களாலும் கருங்கல்லினாலும் கட்டப்பட்ட வடிகால்கள் அகழ்ந் தெடுக்கப்பட்டுள்ளன. அகழாய்வுக்குழி PDV-3க்கு மேற்கே போடப் பட்ட PDV 7 ஆய்வுக்குழியில் செங்கற்களால் ஆன கால்வாய் ஒன்று (closed channel) கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இது கீழ்ப் பகுதியில் ஒரு செங்கல்லையும், பக்கவாட்டில் இரண்டு செங் கல்லையும், கொண்டுள்ளது. மேலும் PDV 9 குழியில் கருங்கல் கால்வாய் (open channel) கண்டுபிடிக்கப்பட்டது. இது வடக்கு தெற்காகச் செல்கிறது. இதே கால்வாய் PDV-10 ஆய்வுக் குழி யிலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இக்கருங்கற்கள் 2·15 மீட்டர் நீளம் கொண்டனவாக, சுண்ணாம்புக் கலவை கொண்டு ஒன்றோ டொன்று ஒட்டி இணைக்கப்பட்டுள்ளன. இவை, விஜயநகர அரசர்கள் மற்றும் சம்புவராய அரசர்களின் பணிகள் ஆகும்.

பெரியார் மாவட்டம், உலகடம்[14] என்ற இடத்தில் சுடுமண் குழாய்கள் சோழர் கால எழுத்துக்களுடன் இத்துறை கண்டு பிடித்துள்ளது. இவை குளத்திலிருந்து நீர் கொண்டு செல்லப் பயன்பட்டிருக்க வேண்டும். இவை கி. பி. 10 முதல் 11-ஆம் நூற்றாண்டு வரையிலான காலகட்டங்களைச் சேர்ந்தவைகளாகும்.

இதே போன்று, சென்னையை அடுத்துள்ள நங்கநல்லூர்[15] சர்வ மங்களா நகரில் வீடு கட்டத் தோண்டும் போது கி. பி. 8-9ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சுடுமண் குழாய்கள் கிடைத்தன- இக் குழாய் ஒன்று 17 செ.மீ. நீளமும், வாயகன்ற பகுதி 13 செ.மீ. அகலமும் குறுகிய பகுதி 10 செ.மீ. அகலமும் கொண்டுள்ளது.

பண்டையத் தமிழகத்தின் நாகரிகச் சிறப்பினைப் பல்வேறு அகழாய்வுகளிலும் கிடைத்துள்ள வடிகால் குழாய்கள் எடுத்தியம்பு பவைகளாகத் திகழ்கின்றன.

---

1. தமிழ்நாட்டு வரலாறு சங்ககாலம் - வாழ்வியல் பக்கம் 473-74
2. கல்லிடத்தியற்றிய இட்டுவாய்க் கிடங்கில் நல்லெயிலுழந்த செல்வர்த் தம்மின் (மதுரைக் காஞ்சி 730)
3. சுருங்கை-வீதி மருகிற் போகி (சிலம்பு 14:65)
4. சுருங்கைத் தூம்பின் மனைவளர் தோகையர் கருங்குழல் கழீஇய கலவை நீரும் (கச்சி மா நகர்புக்க காதை - 28)
5. சேணிலத்தியற்றிய சித்திரச் சுருங்கை சேர் (சீவக - 142)
6. அரிக்க மேடு அகழாய்வு - சு.தில்லைவனம் - பக்.113
7. Vasavasamudram - Dr. R. Nagasamy and A. Abdul Majeed - p.9
8. Excavation at Uraiyur - Dr. K. V. Raman p.21
9. கரூர் அகழாய்வு அறிக்கை
10. இக்கட்டுரை ஆசிரியரால் அகழாய்வு செய்யப்பட்டு வெளிப் படுத்தப்பட்டது.
11. கல்வெட்டு இதழ் 31; கங்கை கொண்ட சோழபுரம் அகழாய்வு கா. நெடுஞ்செழியன். பக். 7-15
12. தொல்பொருள் ஆய்வுத்துறையால் அகழாய்வு செய்யப் பட்டது.
13, தொல்பொருள் ஆய்வுத்துறையால் அகழாய்வு செய்யப்பட்டது.
14. தொல்பொருள் ஆய்வுத்துறையால் தற்போது அகழாய்வு செய்யப்பட்டது.
15. 'The Hindu' - 11-6-1976

---

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையின் அச்சகத்தில் அச்சிட்டு இத்துறை இயக்குநர். திரு. நடன. காசிநாதன் அவர்கள் சார்பாக டாக்டர். நா. மார்க்சியகாந்தி கல்வெட்டியல் உதவிக் கண்காணிப்பாளரால் வெளியிடப் பெற்றது.